DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

Sessions CASE No : 126/2016

Deposition of Witness for : P.W.19

| | | | |
|---|---|---|---|
| Name | : பேரானந்தம் | Calling | இணைபேராசிரியர் |
| Father Name | : | Taluk | : |
| Age | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 08.03.2024.

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் மூத்த உதவி பேராசியராக பணிபுரிந்த போது, கடந்த 13.02.2015 அன்று அலங்கியம் காவல் நிலைய குற்ற எண். 64/2015 வழக்கில் சம்மந்தப்பட்ட பாலாஜி (எ) பாலசுப்பிரமணியம் என்ற பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட குரல்வளை எலும்பு தாராபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து நிபுணத்துவ அறிக்கைக்காக பெறப்பட்டது. நாவடி எலும்பை பரிசோதனை செய்தபோது, நாவடி எலும்பில் எந்தவித எலும்பு முறிவோ, காயங்களோ, இல்லை என குறிப்பிட்டு அறிக்கை வழங்கினேன். மேலும் பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட கழுத்து தோல் பகுதி நோய்குறியியல் ஆய்வு செய்யப்பட்டதில் தோலின் உட்புறபகுதி இரத்த செறிவுடன் காணப்பட்டதாக அறிக்கை பெறப்பட்டது. நான் வழங்கிய **நாவடி எலும்பு சான்றிதழ் அ.சா.ஆ.20**. **நோய்குறியியல் அறிக்கை அ.சா.ஆ.21**. இது சம்மந்தமாக மடத்துக்குளம் வட்டக் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இரத்தசெறிவுடன் காணப்பட்ட பகுதி இறப்பிற்கு முன்பும், பின்பும் ஏற்பட வாய்ப்புகள்

உண்டா என்றால் இறப்பிற்கு முன்புதான் ஏற்படும். இறப்பிற்கு பின்பு ஏற்படாது. உடலில் இரத்தசெறிவு பல காரணங்களால் ஏற்படும் என்றால் தோல்பகுதியின் அடியில் உள்ள இரத்தக்குழாய் இறுக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. விபத்தினால் இரத்தசெறிவு ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. நாவடி எலும்பு என்பது U வடிவத்திலான எலும்பு என்றால் சரிதான். நாவடி எலும்பு மற்ற எலும்புகளுடன் இணைப்படாத தனிப்பட்ட எலும்பு என்றால் மற்ற எலும்புகளுடன் நேரடியாக இணைக்கப்படவில்லை ஆனால் தசைகள் மூலம் மற்ற எலும்புகளுடன் இணைக்கப்பட்ட எலும்பு. நாவடி எலும்பு நாவின் கீழும், மூச்சுக்குழாயின் மேற்புறமும் அமைந்துள்ளது என்றால் சரிதான். நாவடி எலும்பில் எந்தவித சேதாரமும் இல்லை என்று எனது அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**1ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2, 3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்கப்பட்டு ஏற்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

Taken down to my direction in my presence and hearing, and under my personal direction and superintendance and read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- V.John Mino,B.A.,B.L.,
Additional District and Sessions Judge(FAC),
Udumalpet.